கோடிக்கரையாகும். கோடியக்காடு ஒதுக்கக் காட்டை, "கோடிக் கரை வனவிலங்குகள் உய்விடம்" என்கிற வனவிலங்குகள் உய்விடமாக அரசு மாற்றியுள்ளது.

(இ) உய்விடத்தின் சதுப்பு நிலங்களில், மாரி மாதங்களில், பெரும்பாலான நாரைகளும், கிளுவைகளும், பருவகாலத்தை யொட்டி இடம் பெயரும் பிறபுள்ளினங்களும், காணப்படுகின்றன. இப்புள்ளினங்களில் பெரும்பாலானவை மாரி மாதங்களில் வருபவையாகும்.

திரு. கே. விநாயகம்: நாம் பார்க்காத பறவைகள் எல்லாம் வருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மை அல்லவா? அங்கே ஏதோ வனவிலங்கு காணப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதன் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அங்கே ப்ளாக் பக், ஸ்பாடெட் டீர் காணப்படுகிறது. அவற்றின் பாதுகாப்புக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இனாம் நிலங்கள்

*235 வினா. புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு ஏதேனும் கருதியுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புதுக்கோட்டைப் பகுதியில் இனாம் நிலங்களின் குத்தகை உரிமைக் காலளவு பற்றிய ஆய்வையே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அவ்வாறாயின், இப்பகுதியில் 116 பகுதி இனாம் கிராமங்களைத் தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் பெரு நிலங்களை (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் செயல் வரம்பின் கீழ்க் கொண்டு வந்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின் ஷரத்துகளை அமுல் படுத்துவது குறித்து, உயர்நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ள நிலங்களைத் தவிர மற்றவைகளில் வருவாய் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இனாம் நிலங்கள் ஒருவகையாகவும், இன்னும் மற்ற பகுதியில் இருக்கிற நிலங்கள் வேறுவகையாகவும் எடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. எ. மதியழகன்: புதுக்கோட்டை இனாம்கள் தனிச் சட்டத்தின் கீழ் வருகின்றன. 116 இனாம் கிராமங்கள் இவை. ஹைக்கோர்ட்டில் கூட வழக்கு இருக்கிறது.